இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 337 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆடி 01 – வியாழக்கிழமை 17 ஜூலை 2025 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 337 : Thiruvalluvar Year - 2056 - Aadi 01 - Thursday 17 July 2025 - Chennai 16 Pages ₹ 5.00


### பொய்யாகப் பேசிவரும் பழனிசாமிக்கு வருகிற தேர்தலில் மக்கள் நிரந்தரமாக Bye, Bye சொல்வார்கள்! – நல்லாட்சி மூலம்

# மக்களைக் காக்கும் ‘திராவிட மாடல்’ அரசை மக்கள் காத்திட வேண்டும்!

## மயிலாடுதுறை விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சிப் பேருரை!

**மயிலாடுதுறை, ஜூலை 17 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.7.2025) மயிலாடுதுறையில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, அரசு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி, ஆற்றிய உரை வருமாறு:-**

அழகிய மயில்கள் ஆடும் துறை என்ற காரணத்தால் மயிலாடுதுறை! ஆயிரமானாலும் மாயவரம் ஆகாது! இப்படி பல்வேறு சிறப்புக்குரிய மயிலாடுதுறை மாவட்டத்திற்கு, தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்பதோடு இந்த மாவட்டத்தின் மருமகன் என்கின்ற உரிமையோடும், உங்களில் ஒருவனாக நான் இங்கே வந்திருக்கிறேன்.

இன்று மட்டும் 48 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, 47 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், 113 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 12 புதிய திட்டங்களுக்கு திட்டப் பணிகளை திறந்து வைத்தும், 54 ஆயிரத்து 461 பேருக்கு 271 கோடியே 24 இலட்சம் ரூபாய்க்கான நலத்திட்ட உதவிகளை வழங்கயிருக்கிறேன்.

**மயிலாடுதுறை மாவட்டத்தை சொந்த மாவட்டமாக கருதி பாடுபடும் அமைச்சர் மெய்யநாதன்!**

இந்த அரசு விழாவை மிகச் சிறப்பாக பிரமாண்டமாக ஏற்பாடு செய்திருக்கக் கூடிய, பொறுப்பு அமைச்சர் மெய்யநாதன் அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர் நிவேதா முருகன் அவர்களுக்கும் எனது பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

நம்முடைய திராவிட மாடல் ஆட்சி அமைந்த மிக குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு, உலக செஸ் வீரர்கள் எல்லாம் பாராட்டிய 44ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டிகள் சிறப்புப் பெற்றது என்று சொன்னால் மெய்யநாதன் அவர்களுடைய திறமைக்கு அது சான்றாக அமைந்தது!

புதுக்கோட்டை சொந்த மாவட்டமாக இருந்தாலும், பொறுப்பெடுத்துக் கொண்டு இந்த மயிலாடுதுறை மாவட்டத்தை சொந்த மாவட்டமாக கருதி, சிறப்பாக உழைத்துக் கொண்டிருக்கிறார். அவரோடு சேர்ந்து சட்டமன்ற உறுப்பினர் நிவேதா முருகன் அவர்களும் சிறப்பாக பணியாற்றி வருகிறார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.7.2025) மயிலாடுதுறையில் நடைபெற்ற அரசு விழாவில், 48 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவில் 47 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 113 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 12 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆர்.சுதா, சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.பன்னீர்செல்வம், நிவேதா எம்.முருகன், எஸ்.ராஜ்குமார், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஹெச்.எஸ். ஸ்ரீகாந்த், தாட்கோ தலைவர் இளையராஜா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## எனது குடும்பம் என்பது தமிழ்நாட்டு மக்கள்தான்!

**மக்கள் என் மீது அன்பு மழை பொழிந்தனர்!**

நேற்று நான் திருவெண்காட்டிலிருந்து மயிலாடுதுறைக்கு வருவதற்கு நான்கு மணி நேரம் ஆனது. வழிநெடுகிலும் கூட்டம்; மயிலாடுதுறை நகர தெருக்களில் நான் நடந்து, மக்களை சந்தித்தபோது இடையில் மழை வந்தது. அதைப் பொருட்படுத்தாமல், மக்கள் என் மேல் அன்பு மழை பொழிந்தது என்னை நெகிழ வைத்தது.

அதேபோல், இந்த நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கக்கூடிய மாவட்ட ஆட்சியர் ஸ்ரீகாந்த் அவர்களுக்கும், அவருக்கு துணை நின்ற மாவட்ட அரசு அலுவலர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

நம்முடைய திராவிட மாடல் அரசின் இலக்கு, ‘எல்லோருக்கும் எல்லாம்!’ ’அனைத்து மாவட்டங்களுக்கும் சீரான வளர்ச்சி!’ அதனால்தான், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பார்த்துப் பார்த்து மக்களின் கருத்துகளை கேட்டு கேட்டு ஏராளமான திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்!

**மயிலாடுதுறை மாவட்டத்திற்கு இதுவரை ரூ.537 கோடியில் திட்டங்கள்!**

கடந்த 4 ஆண்டு கால திராவிட மாடல் ஆட்சியில், நம்முடைய மயிலாடுதுறை மாவட்டத்திற்கு மட்டும் ஏழாயிரத்து 420 கோடியில், ஆறாயிரத்து 679 வளர்ச்சிப் பணிகளும், இரண்டாயிரம் கோடியில் நலத் திட்ட உதவிகள் என மொத்தம் ஒன்பதாயிரத்து 537 கோடி மதிப்பிலான திட்டங்கள், உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

அதில் மிக முக்கியமான சிலவற்றை சொல்ல வேண்டும் என்றால்,

- மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
- மயிலாடுதுறையில், வரதாச்சாரியார் பூங்காவில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் சிலை!
- தமிழில் முதல் நாவல் எழுதிய மாயூரம் முன்சீப் வேதநாயகம் அவர்களுக்கு அரங்கம் கட்டியிருக்கிறோம்!
- சீர்காழியில் தமிழிசை மூவர் மணிமண்டபத்தில் போட்டித் தேர்வுக்கு தயாராகும் மாணவர்கள் படிக்க 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அடிப்படை வசதிகள் செய்திருக்கிறோம்!
- ஐநூறு கோடி ரூபாய் மதிப்பீட்டில், சாலைப்பணிகள், குடிநீர் வசதிகள், புதிய கட்டடங்கள் என்று 4 ஆயிரத்து 911 பணிகள் செய்திருக்கிறோம்!

**மக்களைப் பொறுத்தவரைக்கும், “ஸ்டாலின் கையில் தமிழ்நாடு பாதுகாப்பாக இருக்கும் – சுயநலத்திற்காக எந்த அந்நிய சக்தியையும் ஸ்டாலின் தமிழ்நாட்டுக்குள் விட மாட்டார், தடுத்து நிறுத்துவார்” என்று நம்பிக்கையோடு மக்கள் வாக்களித்தார்கள். அந்த எதிர்பார்ப்பை நம்பிக்கையை உண்மையாக உழைத்து இந்த நான்காண்டு காலத்தில் நான் காப்பாற்றி இருக்கிறேன்.**

- செம்பனார்கோவில், மாதானத்தில் அரசு கால்நடை மருத்துவமனைக் கட்டடம் கட்டியிருக்கிறோம்!
- சீர்காழியில் கால்நடை மருத்துவமனை கட்டி அதை பயன்பாட்டிற்கு ஒப்படைத்திருக்கிறோம்!
- பூம்புகார் சுற்றுலா வளாகம் மேம்படுத்தப்பட்டு வருகிறது!

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

### மயிலாடுதுறை மாவட்டத்தில் ரூ.432.92 கோடியில் முடிவுற்ற பணிகளைத் திறந்து – புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி

# 54,461 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**மயிலாடுதுறை, ஜூலை 17-**

**மயிலாடுதுறை மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் ரூ.432 கோடியே 92 இலட்சம் மதிப்பீட்டிலான 47 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 12 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 54,461 பயனாளிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.7.2025) மயிலாடுதுறையில் நடைபெற்ற அரசு விழாவில், 48 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவில் 47 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 113 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 12 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 271 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை 54,461 பயனாளிகளுக்கு வழங்கினார்.

**மயிலாடுதுறை மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற பணிகளின் விவரங்கள்**

**பள்ளிக் கல்வித் துறை சார்பில்,** திட்டப்படுகை. துளைசேந்திரபுரம், சின்னங்குடி, தாழஞ்சேரி, ஸ்ரீகண்டபுரம், தில்லையாடி, கீழாத்துகுடி, திருமுல்லைவாசல், வைத்தீஸ்வரன்கோவில் ஆகிய இடங்களில் உள்ள மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் 12 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவில் வகுப்பறைக் கட்டடங்கள்;

**வணிகவரி மற்றும் பதிவுத் துறை சார்பில்,** செம்பனார்கோவில் மற்றும் தரங்கம்பாடி ஆகிய இடங்களில் 3 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் சார்பதிவாளர் அலுவலகங்கள்;

**உயர்கல்வித் துறை சார்பில்,** தருமபுரம் ஞானாம்பிகை அரசு மகளிர் கலைக் கல்லூரியில் 4 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் மற்றும் நூலகம், சீர்காழி வட்டம், புத்தூரில் பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 3 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் கூடுதல் வகுப்பறைகள்;

**மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில்,** கோனேரிராஜபுரம், திருவெண்காடு, காளி, நல்லூர் ஆகிய இடங்களில் 2 கோடி ரூபாய் செலவில் பொது அலகு கட்டடங்கள், தலச்சங்காடு, திருவாடுதுறை, இளையாலூர், கருவாழக்கரை, காரைமேடு, கொற்கை, நெடுவாசல், நெம்மேலி ஆகிய இடங்களில் 2 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் துணை சுகாதார நிலையங்கள், மேலப்பெரும்பள்ளம், முருகமங்கலம், சீர்காழி, புதுப்பட்டினம் ஆகிய இடங்களில் 3 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் ஆரம்ப சுகாதார நிலையங்கள், சீர்காழி அரசு மருத்துவமனையில் 60 இலட்சம் ரூபாய் செலவில் கண் அறுவை சிகிச்சை பிரிவுக் கட்டடம்;

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை சார்பில்,** மாப்படுகையில் 9 இலட்சம் ரூபாய் செலவில் பொது விநியோகக் கடை, ஆணைகாரன் சத்திரத்தில் சந்தப்படுகை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 54 இலட்சம் ரூபாய் செலவில் புதிய வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் ஆய்வகக் கட்டடம், பாண்டூர், ஏகோஜிமகாராஜபுரம், மாதானம், வடகால் ஆகிய இடங்களில் 52 இலட்சம் ரூபாய் செலவில் உணவு தானியக் கிடங்குகள், பச்சைப் பெருமாநல்லூர் மற்றும் ஆக்கூர் ஆகிய இடங்களில் 32 இலட்சம் ரூபாய் செலவில் அங்கன்வாடிக் கட்டடங்கள், ஓதவந்தான்குடி, திட்டை, செம்மங்குடி 1 கோடியே 23 இலட்சம் ரூபாய் செலவில் கிராம செயலகங்கள், கிடங்கல் ஊராட்சியில் 43 இலட்சம் ரூபாய் செலவில் ஊராட்சி அலுவலகக் கட்டடம், சேமங்கலம் ஊராட்சியில் புதுப்பேட்டை அய்வையனார் ஆற்றின் குறுக்கே 1 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் பாலம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் அலுவலக வளாகத்தில் 21 இலட்சம் ரூபாய் செலவில் இசேவை மையக் கட்டடம்;

**வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை சார்பில்,** குத்தாலத்தில் 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் 1000 மெ.டன் கொண்ட சேமிப்புக் கிடங்கு;

தொடர்ச்சி 4ஆம் பக்கம்